*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 352/2022***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-2 (LW-3)***

*Name / Father's Name:* ***திரு.சதிஷ் த/பெ. வையாபுரி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **04.08.2025.**

துவக்க நேரம் 01.15 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது கீரிப்பட்டியில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 22.05.2022 அன்று காலை 11.30 மணிக்குமேல் நான், மல்லியகரை காவல் நிலையத்திற்கு எனது சொந்த வேலையாக சென்றிருந்தேன்.

2) அப்பொழுது காவல் நிலையத்தில் ராமகோவிந்தனும், அன்பரசனுக்கும் இடையே நிலத்தகராறு காரணமாக சண்டை நடந்தது. அன்பரசன், ராமகோவிந்தனை வெட்டிப்புடுவேன் என்று மிரட்டினார். இதுசம்மந்தமாக ராமகோவிந்தன், காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். காவல் நிலையத்தில் வைத்து அன்பரசனும், ராமகோவிந்தனும் மீண்டும் சண்டையிட்டுக்கொண்டார்கள். அந்த சண்டையை போலிசார் விலக்கிவிட்டார்கள். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 01.20 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.08.04 13:43:07 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 352/2022***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-3 (LW-5)***

*Name / Father's Name:* ***திரு.அண்ணாமலை த/பெ. கோவிந்தசாமி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **04.08.2025.**

துவக்க நேரம் 01.21 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது கீரிப்பட்டியில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மதிய நேரத்தில் 01.00 மணியளவில் ராமகோவிந்தன் என்பவரை பார்க்க அவரது வீட்டிற்கு சென்றேன்.

2) அப்பொழுது ராமகோவிந்தன் அவரது வீட்டில் இல்லையென்றும், பைசல் பேச சென்றிருப்பதாகவும் சொன்னார்கள். கீரப்பட்டியில் பைசல் நடக்கும் இடத்திற்கு நான் சென்றேன். அங்கு சண்டை நடக்கும் விவரம் தெரிந்து போலிசாரும் அங்கு வந்துவிட்டார்கள்.

3) காவல் நிலையத்தில் பேசி முடித்துக்கொள்ளலாம் என்று சொல்லி போலிசார் சண்டையிட்டுக்கொண்டவர்களையும், எங்களையும் காவல் நிலையத்திற்கு வரச்சொன்னார்கள். காவல் நிலையத்தில் சமாதானம் செய்துவைத்த பின்பு மீண்டும் காவல் நிலையத்திற்கு வெளியே வந்தவுடன் வழக்கு தரப்பினர்கள் சண்டையிட்டுக்கொண்டார்கள். அதனால் போலிசார் அந்த இடத்தை பார்த்து படம் வரைந்து எழுதிக்கொண்டார்கள்.

4) என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 01.28 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.08.04 13:43:15 +0530

Judicial Magistrate No.2, Attur.